# யாழ்ப்பாணசமூகக் கட்டமைப்பில் சின்னமேளம் - ஒரு வரலாற்றுப் பார்வை

**க.அருந்தவராஜா**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
arunn.msu@gmail.com

### ஆய்வுச்சுருக்கம்

யாழ்ப்பாணச்சமூகக் கட்டமைப்பில் சின்னமேளம் எனப்படுகின்ற தேவதாசிகளது நடனமென்பது ஏறத்தாழ 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை அப்பகுதிகளில் செல்வாக்குப் பெற்றதொரு நடனமாகவே இருந்தவந்தது. சோழரது ஆட்சிக்காலத்தின் பின்னராக இலங்கையில் தோற்றம் பெற்ற தேவதாசிகள் எனப்படுபவர்களது இத்தகைய நடனமானது 18, 19ஆம் நூற்றாண்டுகளில் மட்டுமன்றி 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை கூட யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான சைவ ஆலயங்களில் நடைபெற்ற ஒரு நடன வகையாகக் காணப்பட்டது. அதாவது அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் பிரபல்யமானஆலயங்களாக விளங்கிய சைவ ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்ற சமயங்களில் இவர்களது நடனமானது திருவிழாக்களின் ஒருபகுதியாக இடம்பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய இவர்களது நடனத்தினை அக்காலப்பகுதியில் சின்னமேளம் என்றபெயரினால் பொதுவாக அழைப்பர். அவ்வகையில் அக்காலயாழ்ப்பாண சைவமக்களது பண்பாட்டில் பிரிக்கமுடியாத ஒருஅம்சமாக இவர்களது நடனமானது காணப்பட்டிருந்தது. (ஈழகேசரி,1936ஜனவரி07) மக்கள் பெருமளவில் கூடுகின்ற இடமாக ஆலயங்கள் காணப்பட்டதுடன் பக்திப்பாடல்கள் பாடப்பட்டுப்பலவிதமான விழாக்களும் கொண்டாடப்படுகின்ற இடமாகவும் அது காணப்பட்டது. ஆரம்பகாலங்களில் தமிழ், சமஸ்கிருதசங்கமத்தில் தோன்றி வளர்ந்த நுண்கலை, சிற்பக்கலை போன்றன ஆலயங்களை மையமாகக் கொண்டே வளர்க்கப்பட்டன. ஆலயத்தொடர்புஎன்ற இவ்வம்சமானது நுண்கலையோடு தொடர்புடைய ஆலயங்களுக்குத் தம்மைஅர்ப்பணித்த தேவதாசிகளுடன் சம்பந்தப்பட்டதாகவும் சோழவரலாற்றின் அரசியல் கலாசாரக் குறியீடாகவும் காலக்கிரமத்தில் வளர்ச்சிகண்டது. (சிவசாமி, வி., 2005) எனவே எல்லோராலும் வெறுக்கப்பட்ட, சமூகரீதியாக ஒதுக்கப்பட்ட தாசியொருத்திகலையைத் தொழிலாகக் கொண்டு ஆலயத்துக்குள் நுழைவதைக் குறிக்கும் பதம் தேவதாசிக்குப் பொருத்தமான பதமாகும். இது இவ்வாறிருக்க இந்நடனத்திற்கு எதிராக இத்தகைய நிகழ்வுகள் ஆலயங்களில் நடைபெறுவது தவிர்க்கப்படுதல் வேண்டுமெனவும், இது தமிழ் மக்களது கலாசாரத்திற்கு ஊறினை விளைவிப்பதாகவும் அவ்வப்போது யாழ்ப்பாணசமூகத்திலிருந்த சில முற்போக்கான சிந்தனை உள்ளவர்களினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எதுஎவ்வாறெனினும் பொழுதுபோக்கு சாதனங்களது அதீத தவளர்ச்சியின் பின்னணியில் இந்நடனமானதுபடிப்படியாகச் செல்வாக்கினை இழந்து வந்துதற்காலத்தில் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டதெனலாம்.

***பிரதான சொற்பதங்கள்::*** *தேவதாசிகள், சைவஆலயங்கள், திருவிழாக்கள், ஈழகேசரி, முற்போக்குச் சிந்தனையாளர்கள்*

### அறிமுகம்

இலங்கையில் சோழர் ஆட்சியின் விளைவுகளிலொன்றாகக் கருதப்படுகின்ற இத்தகைய நடனமானது குறிப்பாக அக்கால யாழ்ப்பாணசமூகத்தினரால் ஆண், பெண், வயது வேறுபாடுகளின்றி விரும்பி இரசிக்கப்பட்ட நடனமாகவும் காணப்பட்டது. பெரும்பாலும் யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்களில் நடைபெறுகின்ற திருவிழாக் காலங்களில் பின் இரவு நேரங்களிலே தான் இத்தகைய நடனங்கள் நடைபெறுவது வழமையாக இருந்தது. இந்நடனத்துடன் தொடர்புபட்டவர்கள் சின்ன மேளக்காரிகள் என யாழ்ப்பாணத்தவர்களால் அழைக்கப்பட்டனர். அத்துடன் அவர்கள் வித்தியாசமானமுறையிலும் அக்கால யாழ்ப்பாண மக்களால் பார்க்கவும்பட்டனர். மக்களது பொழுதுபோக்கிற்கான ஊடகங்களிலொன்றாகவும் அந்நேரத்தில் இது கருதப்பட்டது. (*அருந்தவராஜா, க., 2003)* உண்மையில் இந்நடனத்தினை இரசித்தஆண்களில் எத்தனைபேர் கலை இரசனையுடன் இதனை இரசித்தனர் என்பது வினாவிற்குரியதே. காரணம்

இவற்றில் பாலியல் உணர்வுகளை அதிகரிக்கின்ற விடயங்களே அதிகளவில் அடங்கியிருந்தன. அவர்களது நடன அசைவுகளும், ஆடைகளும், அலங்காரங்களும் இவற்றினைத் தெளிவாக இனங்காட்டி நிற்கின்றன. பேராசிரியர் வி.சிவசாமிஈழத்தில் தேவதாசிகளின் நீண்டகால வரலாற்றினைப் பற்றிக் குறிப்பிடும்போது, கி.பி 11 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முதலாம் விஜயபாகுவின் ஆட்சிக்காலத்தில் தென்கைலாசம் எனஅமைக்கப்பட்டவிஜயராஜ ஈஸ்வரம் எனும் சிவாலயத்திலே ஏழு தேவரடியார்கள் நியமிக்கப்பட்டிருந்ததாகக் கூறுகின்றார்.(*சிவசாமி,வி.,2005)* இத்தகைய தேவதாசிகள் யாழ்ப்பாணத்துமன்னர்களால் பராமரிக்கப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகளும் உண்டு.

இடைக்காலயாழ்ப்பாணஅரசிலிருந்த இந்துக் கோவில்கள் சிலவற்றில் நடனமாதர்கள் இருந்திருப்பதற்கானசந்தர்ப்பங்களும் இருந்திருக்கின்றது. கி.பி 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாண இந்துக் கோவில்களில் சதிராட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் இவர்கள் வண்ணார் பண்ணை, இணுவில், நல்லூர், மாவிட்டபுரம், அளவெட்டி போன்ற பிரதேசங்களை யண்டிய ஆலயங்களுக்கு அண்மையில் குடியிருந்ததுடன் ஆலயங்களின் திருவிழாக்களின்போது இந்தியாவிலிருந்தும் விசேடமாக இவர்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர். இத்தகையதாசிகள் குலத்தைச் சேர்ந்தவொரு பெண்ணாகவே கனகி காணப்படுகின்றாள். இவள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த இலங்கை இந்திய ஆடவர்களை தனது அடிமையாக்கிெ காண்டவளென கனகிபுராணத்தைப் பாடிய நட்டுவச் சுப்பையனார் குறிப்பிடுகின்றார். தேவதாசிகள் என்பவர்கள் ஒரு இழிவான பிரிவினர்களாக அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணசமுதாயத்தில் மதிக்கப்பட்டனர். *(ஈழகேசரி, 1949 செப்ரெம்பர் 21)* இத்தகையபெண்கள் ஆண்களை கீழான உணர்வுகளுக்கு இட்டுச் செல்பவர்கள் என்றகருத்தும் 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் தமிழர் சமுதாயத்தில் காணப்பட்டது. ஆங்கிலேயர்கள் காலத்தில் இந்தியாவைப் போன்று இங்கும் தேவதாசிகள் ஒழுக்கம் கெட்டவர்களாக வாழ்ந்துள்ளனர். இதன் காரணமாகவே ஆறுமுகநாவலர் போன்றபலசைவப் பெரியார்களின் கண்டனங்களுக்கு இவர்கள் உட்பட்டிருந்தனர். என்றாலும் நாவலர் ஆகம முறைப்படி ஆலயங்களிலே இசை போன்ற நடனமும் ஒழுக்கமுள்ள கலைஞர்களால் நடத்தப்படுதலைவிரும்பினாரெனக் கூறமுடியாது. சின்னமேளத்திலீடுபட்டசிலர் அக்காலப்பகுதியில் விபச்சாரத்தொழிலும் ஈடுபட்டனர். வேறுசிலர் ஆசை நாயகிகளாகவுமிருந்தனர். உண்மையில் இவர்கள் சங்கீதத்திலோ நடனத்திலோ தேர்ச்சிபெறவில்லை. சின்னமேளத்தில் கொண்ட ஈடுபாட்டினால் சிலர் வறுமையில் கூட இதனைக் கைவிடவில்லை. மேலும் சிலர் மனைவி மக்களின் நகைகள் காணிகள் போன்றவற்றினையும் விற்பனைசெய்து இதற்குச் செலவுசெய்தனர். இச்சின்னமேளக்காரிகள் 100ரூபா, 200ரூபா என்பவற்றிற்குப் பேசப்பட்டனர். அவ்வகையில் மிகநீண்டகாலமாக யாழ்ப்பாணச் சமுதாயக் கட்டமைப்பில் இந்நடனமானது பிரதான இடத்தினைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுப் பிரச்சினை**

சின்னமேளம் எனப்பட்டபாரம்பரியமானகலையானதுதற்காலத்தில் காணாமல் போய்விட்டது. உண்மையில் இத்தகையநடனத்தில் பிற்பட்டகாலங்களில் சிலகுறைபாடுகள் காணப்பட்டிருந்தாலும்கூட அவை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமானது தொடக்க காலங்களில்வேறாகவே இருந்தது. இதனால் இத்தகைய மறைந்துபோன கலையின் தனித்துவத்துவமானது அடையாளங் காணப்படுதல் வேண்டும்.

**ஆய்வினது நோக்கங்கள்**

1. மறைந்துபோயுள்ள இக்கலையினது மகத்துவத்தினைநிகழ்காலத்தில் வாழ்பவர்கள் அறியும் பொருட்டுவெளிக்கொண்டுவருதல்.
2. இக்கலை மறைந்துபோனமைக்கான காரணங்களை எடுத்துக்காட்டுதல்.
3. இந்நடனத்திற்கு எதிராகவெளிக்கிளம்பிய எதிரப்புக்களை இனங்காணுதல்.
4. இவ்விடயமாக ஆய்வினை மேற்கொள்ள விரும்புகின்ற ஆய்வாளர்களுக்கு முன்னோடியான ஆய்வாக அமைதல்.
5. ஆய்வினது பிரதான நோக்கங்களிலொன்றாக ஆவணப்படுத்தல் காணப்படுகின்றது.

**ஆய்வுமுறையியல்**

வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் நோக்கப்படுகின்ற இவ்வாய்வானது பெருமளவிற்கு இருபதாம் நூற்றாண்டினது முக்கால் பகுதியினை உள்ளடக்கியதாக உள்ளது. ஆய்விற்கான ஆதாரங்கள் வரிசையில்முதற்தர ஆதாரங்களாகசமகாலத்தில் வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகைகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. காரணம் அவை நேரடியாகவே சின்னமேளத்தினுடைய தாக்கமானது எவ்விதமாக யாழ்ப்பாணமக்களது வாழ்வியலில் செல்வாக்கினைச் செலுத்தியிருந்தன என்பதனை அவதானித்து வெளிப்படையாகவே எடுத்துக் கூறுகின்ற ஆதாரங்களாகக் காணப்படுகின்றன. அவ்வகையில் அக்காலப்பகுதியில் வெளிவந்து கொண்டிருந்த ஈழகேசரிப் பத்திரிகையுடன்,சமகாலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த பிறபத்திரிகைகளும் முதற்தர ஆதாரங்கள் வரிசையில் பிரதான இடத்தினைப் பெறுகின்றன. அத்துடன் அக்காலத்தில் இந்நடனத்தில் ஈடுபட்டவர்களையும் அவற்றுடன் தொடர்புபட்டவர்களையும் சந்தித்துப் பெறப்பட்டதரவுகளும் கூட முதற்தர ஆதாரங்கள் வரிசையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறே இரண்டாந்தர ஆதாரங்கள் வரிசையில் முதற்தர ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு பிற்பட்டகாலங்களில் எழுதப்பட்ட நூல்கள்,கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்டதரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பிரதேசம்**

ஆய்வுப் பிரதேசமானது குறுகியதாக இருக்கும் போதுதான் ஆய்வு நடவடிக்கைகள் நுணுக்கமானதாக அமையும்.அவ்வகையில் இலங்கையில்தமிழ் மக்கள் அதிகமாக வாழுகின்ற வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் இத்தகைய நடனவகை காணப்பட்டிருந்தாலும்கூட இவ்வாய்வின் பொருட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்விற்கான பிரதேசமானது வடஇலங்கையில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிரதேசம் மட்டுமே. இப்பிரதேசமானது யாழ்ப்பாணக் குடாநாட்டினையும் அயலில் உள்ள தீவுகளையும் உள்ளடக்கியதே. அச்சமயத்தில் இங்கு காணப்பட்ட பெரும்பாலான சைவ ஆலயங்களில் திருவிழாக்களின் ஒருபகுதியாகவே இத்தகைய நடனங்கள் காணப்பட்டமைகுறிப்பிடத்தக்கது.

**முன்னைய ஆய்வுகளது மீளாய்வு**

இப்பகுதிக்கான முன்னோடியான ஆய்வாகஎவற்றினையும் நாம் கருதமுடியாது விட்டாலும்கூட பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள் இத்தகையநடனம் பற்றியதாகதாம் எழுதிய நூல்கள் சிலவற்றிலும் ஒருசில கட்டுரைகளிலும் இவ்விடயமாகக் சிலகுறிப்புக்களைத் தந்துள்ளார். அவருடையபடைப்புக்கள் நடனக்கலை தொடர்பானதாக அமைந்திருந்தாலும்கூட அவற்றில் சின்னமேளம் தொடர்பானகுறிப்புக்கள் சிலவற்றினையும் கொடுத்துள்ளார். அவ்வாறேவ.மகேஸ்வரன் என்பவரும் குறித்தவிடயம் தொடர்பாக ஒரு சிலகட்டுரைகளையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது கட்டுரைகளில் சின்னமேளத்தினுடைய சிறப்புக்கள் சித்தரிக்கப்படுகின்றன.

அவைஅக்காலத்தில் பெற்றிருந்த முக்கியத்துவத்தினைஅவரது கட்டுரைகளிலிருந்து அறியலாம். இவற்றினை விடகலாநிதி க. அருந்தவராஜா முதுகலைமாணிப் பட்டப்படிப்புக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2003இல் சமர்ப்பித்த ஈழத்தமிழரின் சமூகஅரசியல் வளர்ச்சிக்கு ஈழகேசரி ஆற்றியபங்களிப்பு என்ற ஆய்வுகட்டுரையில் மேற்குறித்தவிடயமாக சிலவிடயங்கள் தரப்பட்டுள்ளன. அவரது அவ்வாய்வின் சிலபகுதிகளில் இவ்விடயந் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சுருக்கமும் முடிவும்**

யாழ்ப்பாணத்து மக்களது சமூக,வாழ்வியல் கட்டமைப்பில் ஏறத்தாள 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை செல்வாக்கினைப் பெற்றதொரு நடனக்கலையாக இத்தகைய சின்னமேளக் கலையானது இருந்தவந்துள்ளது. கமலாகோஷ்டியினர்ருக்கு மணிகோஷ்டியினர்,புத்தூர் மார்க்கண்டு கோஷ்டியினர் எனபல குழுவினராகக் காணப்பட்ட இந்நடனத்திற்கு எத்தனையோபேர் அடிமையாகித் தமதுசொத்துக்களை,குடும்பங்களையெல்லாம் இழந்த செய்திகளெல்லாம் யாழ்ப்பாணவரலாற்றில் உண்டு. சின்னமேளங்களை எதிர்ப்பவர்களைவிட நேரடியாகவோ மறைமுகமாகவோ யாழ்ப்பாணத்தில் ஆதரிப்பவர்களே அதிகளவில் காணப்பட்டனர். இலங்கைசுதந்திரம் பெற்றதன் பின்பும் பலகாலம் இது ஆலயங்களில் இடம்பெற்றுவந்தது. பெண்கள் பரதநாட்டியம் ஆடவும்,நாடகங்கள் நடிக்கவும் கூட நீண்டகாலம் தயக்கம் காட்டியமைக்கு இதுவும் ஒருகாரணம். தற்காலத்தில் இதன் வழிவந்தகுடும்பங்களைக் காண்பதரிது.மிகவும் செல்வாக்குடன் திகழ்ந்திருந்த இக்கலையானது பின்னாளில் இக்கலைக்கு ஏற்பட்டுவந்த மாற்றீடுகளின் பின்னணியில் வழக்கொழிந்து போனது.குறிப்பாக தென்னிந்தியசினிமாக்களின் வரவு,நாடகக் கலையினது வளர்ச்சி,நாகரிக முன்னேற்றம், இதற்கு எதிராக உருவான எதிர்ப்பலைகள் என்பவை காரணமாகப் படிப்படியாக யாழ்ப்பாண சமுதாய அமைப்பலிருந்து அகலத் தொடங்கியது. இத்தகையயாழ்ப்பாணத் தமிழ் மக்களதுவாழ்வியலில் மிகவும் செல்வாக்குச் செலுத்தியிருந்த இக்கலையானது மீளவும் புத்துயிர்ப்புப் பெறவேண்டும் என்பதனைவிடுத்து அக்காலத்தில் அவற்றினது முக்கியத்துவத்தினையாவரும் தெரிந்துகொள்ளுதல் அவசியமானதே.


**உசாத்துணைப் பட்டியல்**

**ஆய்வுக்கட்டுரை**

1. அருந்தவராஜா, க., (2003) *ஈழத்தமிழரின் சமூகஅரசியல் வளர்ச்சிக்குஈழகேசரி ஆற்றியபங்களிப்பு* (முதுகலைமாணிப்பட்டத்திற்காக 2003இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை, பிரசுரிக்கப்படவில்லை).

**நூல்கள்**

2. சிவசாமி,வி., (2005), *பரதக்கலை*, யாழ்ப்பாணம்.
3. சிவசாமி,வி.,(2005), *இந்துப்பண்பாடு அன்றும் இன்றும்*, யாழ்ப்பாணம்.
4. திருச்சந்திரன், செல்வி.,(1999), “தமிழர் சமூக அரசியல் பின்னனியில் தேவதாசிகள் எனும் படிமத்தின் உருமாற்றங்கள”. *தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்ணிலை நோக்கு*, குமரன் பதிப்பகம் கொழும்பு.

**கருத்தரங்கில் வாசிக்கப்பட்டவை**

5. மகேஸ்வரன், வ., (2012) “சின்னமேளம் - யாழ்ப்பாணத்தில் மறக்கப்பட்ட நிகழ்த்துகலை”, *யாழ்ப்பாணவாழ்வியல்*, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

**பத்திரிகைகள்**
*இந்துசாதனம்* பத்திரிகையின் வெளியீடுகள் (1900- 1975),சைவபரிபாலன சபை,யாழ்ப்பாணம்.
*ஈழகேசரி*பத்திரிகையின் வெளியீடுகள்(1930-1958),திருமகள் அழுத்தகம்,சுன்னாகம்.
*ஈழநாடு*பத்திரிகையின் வெளியீடுகள் (1960 இன் பின்னர்),யாழ்ப்பாணம்.
*சுதந்திரன்*,பத்திரிகையின் வெளியீடுகள் (1950இன்பின்னர்),தமிழரசுக் கட்சி,யாழ்ப்பாணம்.